# தங்காலை நகர சபை

## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

---

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 26 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஜூன் 28 திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் தங்காலை நகர சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தங்காலை நகர சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி சேவை ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையாக மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டியிருந்த ரூபா 221,663 தொகைக்காக கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 42,174 இற்கான செலவுக்காக 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சம்பளமற்ற விடுமுறைகளுக்காக 19 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 141,571 எனினும் கடன்பட்டோரின் கீழ் ரூபா 16,311 தொகை மாத்திரமே காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2009 ஆண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய தொகை என காட்டப்பட்டிருந்த வீதி விளக்கு பராமரிப்புத் தொகை ரூபா 89,950 ,மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த போதும் அத் தொகை கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2008 ஆண்டு தொடர்பாக கிடைக்க வேண்டியிருந்த வீதி விளக்கு பராமரிப்புத் தொகை ரூபா 32,362 எனினும் அத் தொகை ரூபா 54,940 என ரூபா 22,578 மிகையாக கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பித்திருந்த இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் பொதுக் களஞ்சிய இருப்பு ரூபா 391,638 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 322,321 தொகை என ரூபா 69,317 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(எ) பதவியணிக் கடன் பதிவேட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணிக் கடன் முற்பெறுவனவு ரூபா 14,830 எனினும் அம் மீதியினை ஐந்தொகையில் முற்பெறுவனவு எனக் காட்டப்படாமல் கிடைக்க வேண்டிய மொத்தப் பதவியணிக் கடனில் இருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது. பதவியணிக் கடன் முற்பெறுவனவு மீதியில் ரூபா 3,945 முன்னைய ஆண்டு முதல் முற்பெறுவனவு என குறிப்பிட்டிருந்ததுடன், அம் மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஏ) கணக்கு இலக்கம் 06700175533192 தொடர்பான 2010 திசெம்பர் மாதத்தில் அறவிடப்பட்டிருந்த ரூபா 3,750 இற்கான வங்கிக் கட்டணத்தை மீளாய்வாண்டிற்கான செலவுகள் எனக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவுகள் ரூபா 48,400 இனை வருமானச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் ஊழியர் பிணை வைப்புக்கள் முதலீட்டு மீதி ரூபா 5,959 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 7,251 என காணப்பட்டமையால்

வித்தியாசம் ரூபா 1,292 ஆகும்.

1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த முற்பணம் ரூபா 54,133 இனை இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் நி.பி.371(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 1,332,276 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 1,600,605 ஆகக் காணப்பட்டது.

2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) கூட்டுத்தொகை ரூபா 178,090 இற்கான செல்லுபடியாகும் காலம் கடந்துள்ள 13 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் நி.பி. 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2010 ஆண்டின் போது பேணப்பட்டிருந்த பொழிப்பு காசேட்டின் பிரகாரம் வங்கி மீதி மேலதிகப்பற்றாகக் கொண்டுவரப்பட்டிருந்தது.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ள வாறான | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2009 மதிப்பிடப் பட்ட | 2009 உள்ள வாறான | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000’ | ரூபா000’ | ரூபா 000’ | ரூபா000’ | ரூபா000’ | ரூபா 000’ |
| வீத வரி மற்றும் வாடகை | 1,529 | 1,726 | 2,340 | 1,559 | 764 | 2,744 |
| வாடகை | 5,062 | 3,831 | 2,493 | 3,974 | 3,042 | 2,701 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 582 | 582 | 122 | 587 | 413 | 269 |
| சேவைக் கட்டணம் | 3,219 | 3,345 | 40 | 2,491 | 2,385 | 126 |
| எழுத்தாணைக் கட்டணம் | 322 | 291 | 32 | 271 | 264 | 17 |
| மற்றும் கண்டப் பணம் ஏனைய வருமானங்கள் | 3,418 | 3,252 | 166 | 2,955 | 2,885 | 69 |

### 2.3.2 வீத வரி

நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 170(1) மற்றும் (2) இன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,379,171 இற்கான நிலுவை வீத வரியினை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் மீண்டுவரும் செலவுகள் | 2010 பாதிடப்பட்ட | 2010 உள்ளவாறான | 2010 முரண் | 2009 பாதிடப்பட்ட | 2009 உள்ளவாறான | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ |
| ஆளுக்குரிய வேதனம் | 43,585 | 23,255 | 20,330 | 40,554 | 23,058 | 17,496 |
| ஏனையவை | 12,550 | 11,585 | 965 | 9,875 | 9,347 | 528 |
| உப கூட்டுத் தொகை | 56,135 | 34,840 | 21,295 | 50,429 | 32,405 | 18,024 |
| மூலதன செலவுகள் | 51,939 | 54,175 | (2,236) | 896 | 23,416 | (22,520) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 108,074 | 89,015 | 19,059 | 51,325 | 55,821 | (4,496) |

மேற் கூறிய தகவல்களின் பிரகாரம் 2010 பாதிடப்பட்ட மீண்டுவரும் செலவுகளில் ரூபா 21,295,000 இற்கான சேமிப்பு ஒன்று காணப்பட்டதுடன், மூலதனச் செலவுகளுக்காக பின்னர் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 50,547,000 இற்கான குறைநிரப்பு மதிப்பீட்டுடன் பாதிடப்பட்ட மொத்த மூலதனச் செலவினை விஞ்சி ரூபா 2,336,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

2.5 மனித வள முகாமைத்துவம்

2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவியணியினர் | 02 | 01 |
| இரண்டாம் தரம் | 66 | 50 |
| ஆரம்ப தரம் | 52 | 38 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | - | 33 |

(ஆ) 2006 ஏப்ரல் 10, 2006 மே 10 மற்றும், 2006 ஆகஸ்ட் 01 திகதிகளைக் கொண்ட முகாமைத்துவ சேவை சுற்று நிருப இலக்கங்கள் 28, 28(i), 28(ii) இன் பிரகாரம் முறையான அங்கீகாரம் ஒன்று இன்றி சபையினால் அமைய மற்றும் தற்காலிக ஊழியர்கள் 33 பேர் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது.

2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

2.6.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 26,124,917 ஆக காணப்பட்டதுடன் 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,542,407 ஆகும்.

2.6.2 அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,077,270 ஆக காணப்பட்டதுடன் சேவையை விட்டுச் சென்றுள்ள ஊழியர்களிடம் பல வருட காலம் முதல் அறவீடுகள் இடை நிறுத்தப்பட்டிருந்த மீதி ரூபா 47,375 ஆகும்.

2.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2009 ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் தொடர்பாக ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்புத் தொகை செலுத்துவதில் தாமதம் காணப்பட்டமையால் ரூபா 5,109 இற்கான மிகை விதிப்புத் தொகை 2010 ஜுன் மாதத்தின் போது செலுத்தப்பட்டிருந்தது.

2.8 செயற்பாட்டுத் திறமையின்மை

(அ) தங்காலை பொதுச் சந்தை

* தென் மாகாண கிராமிய பொருளாதார மேம்பாட்டு செயற்திட்டத்தின் மூலம் ரூபா 29,355,572 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த தங்காலை பொதுச் சந்தை 2008 ஆண்டின் போது சபைக்கு உரித்தாக்கப்பட்டு இரண்டு வருடங்களை விட அதிகமான காலம் முடிவடைந்திருந்த போதும் அந்த சந்தை பொது மக்களுக்காக திறக்கப்பட்டிருக்கவில்லை.

* அச் சந்தை வளவில் சபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 10 கடைகள் உட்பட 25 கடைகள் வாடகைக்கு கொடுக்காமல் இரண்டு வருடங்களை விஞ்சிய காலம் மூடப்பட்டிருந்தமையால் சபைக்கு பெற்றுக்கொள்ள கூடியதாகவிருந்த வருமானம் ஒன்றினை இழந்துள்ளன.

* அக் கட்டிடங்களில் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந் காவலாளிக்கு 2010 ஜனவரி மாதம் முதல் 2010 ஆண்டு ஆகஸ்ட் வரை சம்பளமாக ரூபா 122,544 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்தல்

1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் சட்டம் மற்றும் அது தொடர்பாக 1994 பெப்ரவரி 18 திகதிய இலக்கம் 04/1994 கொண்ட நிதி அமைச்சின் சுற்று நிருபத்தின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்று பெற்றுக் கொள்ளப்பட்ட வேண்டும். எனினும் 2010 ஆண்டிற்காக 09 அங்கத்தவர்களில் 05 பேர் மேற் கூறிய கூற்றுக்களைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(இ) பொது நூலகம்

------------------------

(i) நூலகத்தில் இருந்து 2009 மற்றும் 2010 ஆண்டுகளின் போது வழங்கியிருந்த ரூபா 5,710 தொகை பெறுமதியான புத்தகங்களை திருப்பி ஒப்படைத்திருக்காமையால் ஏற்பட்டுள்ள நட்டத்தினை வாசகர்களிடம் அல்லது அவர்களின் பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2009 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நூலகத்தின் உருப்படி சரிபார்த்தலின் மூலம் இனங்காணப்பட்ட புத்தக குறைவுகளின் பெறுமதி ரூபா 2,457 பெறுமதியினை குறிப்பிட்ட அலுவலர்களிடம் கணக்காய்வுத் திகதியாகிய 2011 செப்டம்பர் 12 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தலைவரின் யப்பான் சுற்றுலா

----------------------------------------------

யப்பானில் நாகசாயி நகரில் 2009 ஆகஸ்ட் 06 முதல் 10 ஆந் திகதி வரை நடைபெற்றுள்ள சமாதானத்திற்கான நகர முதல்வர்களின் 7வது மாநாட்டிற்கு தலைவர் கலந்து கொள்வது தொடர்பாக ரூபா 192,200 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. மாநாட்டில் கலந்துகொள்வதற்காக 2009 ஆகஸ்ட் 03 திகதி கடிதத்தின் மூலம் கிடைத்திருந்த அங்கீகாரம் 2009 ஆகஸ்ட் 06 திகதிய கடிதத்தின் மூலம் இரத்து செய்யப்பட்டிருந்தது. மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த மொத்தத் தொகையையும் மீண்டும் சபை நிதியத்திற்கு செலவு வைக்குமாறு 2009 ஆகஸ்ட் 25 திகதிய கடிதத்தின் மூலம் ஆளுனர் தலைவருக்கு அறிவித்திருந்த போதும் கணக்காய்வுத் திகதியாகிய 2011 செப்டம்பர் 12 திகதி வரை தலைவரினால் அந்த தொகை சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

2.9 புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் பேணல்

-------------------------------------------------------------------

சபையினால் பேணப்பட வேண்டியிருந்த 06 ஆவணங்கள் முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை.

2.10 அகக் கணக்காய்வு

------------------------------

சபையினால் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு